Y.M.C.A

## முஸ்லிம் காங்கிரஸ்-ஹிஸ்புல்லா இழுபறி தொடர்கிறது

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் செயற்குழு அறிவித்துள்ளது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியற் செயற்குழு எடுக்கும் முடிவை உறுப்பினர்கள் ஏற்கவேண்டும் என்பது கட்சியின் சட்டவிதியாகும். ஜனாப் ஹிஸ்புல்லா இன்னமும் தமது —04 ஆம் பக்கம் பார்க்க

## நியமனம் பெற்ற 9 வைத்தியர்கள் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றனர்

யாழ் போதனா வைத்தியசாலையில் அண்மையில் நியமனம் செய்யப்பட்ட 28 உள்ளக பயிற்சி வைத்தியர்களில் 19 பேர் மட்டுமே தற்பொழுது இங்கு பணிபுரிவதாக வைத்தியசாலைப்பணிப்பாளர் தெரிவித்தார். நியமனம் செய்யப்பட்ட மிகுதி 9 பேரும் கொழும்பு பகுதிகளுக்கு மாற்றம் கோரிச்சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேவையாக இருந்த 26 வைத்தியர்களுக்கு மேலும் இரண்டு வைத்தியர்களை சேர்த்து மொத்தம் 28 ஆக அதிகரிக்கப்பட்ட போதும் பலர் இடமாற்றம் பெற்றுச் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை ஈடு செய்யும் —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 119 பிரமோதூத பங்குனி 12 (26-03-1991) செவ்வாய்

## உலர் உணவு அட்டை மீள்பரிசீலனை

கந்தர்மடம் (ஜே/104), (ஜே/102) இராம சேவகர் பிரிவில் வசிக்கும் குடும்பங்கள் தமது உலர் உணவு விநியோக அட்டைகளை மீள்பரிசீலனைக்காக கிராமசேவையாளரிடம் இதுவரை ஒப்படைக்காது விடில் தமது உணவு விநியோகத்தை பெற முடி — 04 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கு புனர்வாழ்வு கூட்டம் அமளி துமளியுடன் முடிந்தது

கிழக்குப்பகுதி புனர்வாழ்வுக் கழகக் கூட்டம் தனியார் இல்லத்தில் நடாத்தப்பட்டதால் கூட்டத்தில் அமளி துமளி ஏற்பட்டு கால வரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. இக் கூட்டம் ஆரம்பகாலம் முதல் ஆங்கிலத்திலேயே நடைபெறுவதால் தமிழில் நடாத்துமாறு மட்டக்களப்பு காந்தி சேவா சங்கம் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தது. இதனை ஏற்கமுடியாது எனக் கூறிய கழகத்தலைவர் —04 ஆம் பக்கம் பார்க்க

### யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்

## குருநாகல் மகாபொல நிகழ்ச்சிக்கு செல்வதில்லை என முடிவு

எதிர்வரும் 31-ந் திகதி குருநாகலில் நடைபெறவிருக்கும் மகாபொல புலமைப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்வதில்லையென யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று கைலாசபதி அரங்கில் நடைபெற்ற கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது.

போக்குவரத்து வசதியின்மை, பாதுகாப்பின்மை ஆகிய காரணங்களினாலேயே இவ்விழாவில் பங்குபற்றுவதில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் உப வேந்தர் அ துரைராஜா, பதிவாளர் எஸ். பரமேஸ்வரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ப 12)

## சவூதி இராணுவத்துக்கு இலங்கையர் சமையல் வேலை

சவூதி அரேபியாவில் உள்ள ராணுவ முகாம்களில் சமையல் பணிபுரிந்த இலங்கையர்கள் யுத்தம் ஆரம்பித்ததும் ராஜினாமாக் கடிதங்களைக் கொடுத்ததால், இருட்டறைகளில் வைக்கப்பட்டதாக அங்கிருந்து வந்த ஒருவர் கூறினார்.

இவர்கள் அங்கிருந்து சண்டை நடைபெறும் பகுதியில் இராணுவத்தினருக்கு சமையல் செய்யும் பணிகளுக்கு அனுப்பப்பட்டனர்.

வேடிச்சத்தங்கள் மத்தியில் இவர்கள்வேலைசெய்யமறுத்ததால் சவூதி இராணுவத்தால் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

## கோட்டை ரயில் நிலையத்தில் என்ஜின் - பெட்டிகள் மோதல்

கோட்டை ரயில் நிலையத்தில் கடந்த வெள்ளி இடம்பெற்ற விபத்து ஒன்றினால் பதினைந்து பேர்வரை காயமடைந்துகொழும்புபெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரயில் என்ஜினை பெட்டிக அதனைச்சாரதி வேகமாகச் செலுத்தி வந்ததால் இந்த விபத்து இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சாரதி பயிலுநர் என்பதால் இது இடம்பெற்றுள்ளதாக ரயில்வே பகுதி வட்டாரங்கள்

### ★ தாமாகவே வேலையை விட்டதாகக் கருதப்பட்ட

# தமிழ் ஊழியர் ஒருவருக்கு 2 லட்சம் ரூபா நட்டஈடு

### எயர் லங்காவுக்கு எதிரான வழக்கு தீர்ப்பு

தமது சொந்த ஊருக்கு லீவில் சென்று நாட்டுச் சூழ்நிலையில் கடமைக்குத்திரும்பாத தமிழ் ஊழியர் ஒருவரை எயர் லங்கா நிறுவனம் வேலை நீக்கம் செய்தது முறையற்றது எனத் தீர்ப்பளித்த தொழில் நீதிமன்றம் அவருக்கு 2 லட்சம் ரூபா நட்ட ஈடு வழங்கியுள்ளது.

1986 ஆம் ஆண்டு மே 29 ஆம் திகதி 6 நாள் லீவில் யாழ்ப்பாணம் வந்த திரு. ராஜரத்தினம் 10 6 86 இல் மீண்டும் வேலைக்கு வராததால் தாமாகவே வேலையில் இருந்து விலகியதாக எயர் லங்கா நிறுவனம் அறிவித்திருந்தது. இதனையடுத்து அவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இதில் சாட்சியமளித்த அவர்; தனது டயரியில் இருந்து அன்றைய நேரம் வடக்கில் இடம்பெற்ற சம்பவங்களை ஆதாரம் காட்டினார்.

அதாவது அன்றுபோக்குவரவு சீரின்மை, தபால் தந்தி தொடர்புகள் துண்டிப்பு, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டபதற்ற நிலை, விமானத் தாக்குதல்கள் என்பவற்றை விளக்கிக் கூறினார்.

இதனையடுத்து நீதிபதி தமது தீர்ப்பில் 'தலைவிடியும், காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் அதன் கொடுமை' வழக்காளி வேலைக்கு வரப்பல தடவைகள் முயன்றுள்ளார். ஆதலால் அவரைத் தாமாகவே வேலையை விட்டு விலகியவர் எனக் கருத முடியாது. அது தவறு.

'வெக்கேசன் ஓவ் போஸ்ட்' என்ற கருத்தில் உயர் நீதிமன்றத்தில் தீர்க்கப்பட்ட — 04 ஆம் பக்கம் பார்க்க

### கடந்த செவ்வாய் இரணைதீவு

## கடலில் காணாமற் போனோர் வலைப்பாட்டில் விடுவிப்பு

இரணைதீவு கடலில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு காணாமற் போனவர்கள் எனக் கருதப்பட்ட சுமார் ஆறுபேர் தேற்று முன் தினம் 'விஸ்வி விஸ்வி' கப்பலில் பொருள்களை இறக்கி விட்டு கிடைத்த சம்பளத்துடன் குடும்பமாக இரணைதீவுக்கு படகில் செல்லும் தாக விடுவிக்கப்பட்ட அரவிந்னொவ் (இரணைதீவு) — 04 ஆம் பக்கம் பார்க்க

ரயில் என்ஜினை பெட்டிக ளுடன் இணைக்கும் போது ரயில்வே பகுதி அட்டாரங்கள் தெரிவித்தன. (74

## வடக்குக் கிழக்கு நிவாரணத்துக்கு கனடா ஒரு கோடி ரூபா உதவி

வடக்குக்கிழக்கு பகுதி நிவா ரண நடவடிக்கைகளுக்காக கனடா அரச ஒரு கோடி ரூபாவை அன்பளிப்பாக வழங் கியுள்ளது.

கொழும்பிலுள்ள கனடிய தூதுவர் செல்வி நான்சி எம் ரைக்கின் இதற்கான காசோ லைகளை ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய இலங்கைப் பிரதிநிதி டபிள்யூ டீ. கிளா ரன்ஸிடமும், யுனிசெப் திட்ட உத்தியோகத்தர் ஜைகிகாஸ்ட் லனிடமும் கையளித்தார்.

ஐ நா. அகதிகள் தூதரகத் தின் மூலம் இந்த நிதி மன் னாரில் உள்ள சுமார் 50ஆயி

— 04 ஆம் பக்கம் பார்க்க

முப்பது பேர் தேற்று முன் தினம் வலைப்பாட்டில் வைத்து கடற்படையினரால் விடுவிக்கப்பட்டனர்.

வலைப்பாட்டில் தரித்து தீவுக்கு படகில் செல்லும் போது கடற்படையினரால் பிடிக்கப்பட்டு பயணம் செய்த படகுடன் காரைநகர் முகா முக்கு கொண்டுசெல்லப்பட்ட

## பாடசாலைகளைப் பாவிக்க கல்வியமைச்சில் அனுமதி

பாடசாலைகளையோ, அதன் கட்டடங்களையோ, மைதானத்தையோ அல்லது பாடசாலைக்குச்சொந்தமான வேறு ஏதாவது இடத்தையோ எக்காரணம் கொண்டும் தனிப்பட்டவர்களுக்கோ, தனி யார் நிறுவனங்களுக்கோ

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பு டிப்போ பணம் பொலிஸ் நிலையத்தில்

மட்டக்களப்பு பஸ் டிப்போ வில் தினமும் வருகின்ற பணம் இனிமேல் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்படும்.

டிப்போ காசாளர் பொலிஸ் நிலையத்தில் இருந்து தனது கருமங்களைச்செய்வார். பஸ் நடத்துநர்கள் தமது ரிக்கற் பணத்தை அங்கு வைத்தே காசாளரிடம் ஒப்படைப்பர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் டிப்போவில் இடம் பெற்ற ஒரு லட்சம் ரூபா கொள்ளையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (74)

## உள்ளூராட்சித்தேர்தல் நியமனப்பத்திரங்கள் கட்சிகள் தாக்கல் செய்ய ஆரம்பித்துவிட்டன

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலுக்கான நியமனப்பத் திரங்கள் இம்மாதம் 21 ஆம் திகதி முதல் தாக்கல் செய் யப்படுகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணங் களைத் தவிர 10 மாநகர சபைகள், 33 நகர சபைகள், 194 பிரதேச சபைகளுக்கே இத்தேர்தல் நடைபெறவுள் ளது.

களுத்துறை பிரதேசசபைக்கு ஐ. தே. க. நியமனப் பத்திரங் களைத் தாக்கல் செய்து விட்டது.

களனி, தேசம்பே நகர சபைகளுக்கு ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சி வேட்பு மனுக் களை சமர்ப்பித்துள்ளது.

பேருவளை, அம்பலாங்கொடை பகுதிகளுக்கு சுயேட்சைக் குழுக்களும் புத்தளத்தில்

04-ஆம் பக்கம் பார்க்க

● இராணுவ நடவடிக்கையால் சேதமான

## யாழ் நகர சுத்திகரிப்பு வேலைக்கு மாகாணசபை நிதியுதவி

இராணுவ நடவடிக்கைக ளால் கடந்த ஜூன் முதல் சேதமடைந்து உருக்குலைந்த யாழ் நகர சுத்திகரிப்பு வேலை களுக்கு வட, கிழக்கு மாகா ணசபை யாழ்மாநகரசபைக்கு சுமார் ஒரு மில்லியன் ரூபா வை வழங்கியுள்ளது.

சுத்திகரிப்பு, சேதங்களை அகற்றுவதற்கு சுமார் நான ரை மில்லியன் ரூபாவைப் பெறுவதற்கு மதிப்பீடு செய்த போது முதற்கட்டமாக ஒரு மில்லியன் ரூபா வழங் கப்பட்டுள்ளது.

மேற்படி நிதி பெறப்பட் டுள்ளதை அடுத்து நகர சுத் திகரிப்பு சேதங்களை அகற் றும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என யாழ்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## திருப்பழுகாமம் சுற்றிவளைப்பு 150 பேர் கைதாகினர்

மட்டக்களப்பில் திருப்பழு காமத்தை கடந்த ஞாயிறன்று சுற்றிவளைத்த பெரியபோர தீவு முகாம் ராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் அங்கு 150 பொதுமக்களைக் கைது செய்தனர்.

முகாமிற்குகொண்டு சென்ற இவர்களை இத்திரவதையின்

— 04 ஆம் பக்கம் பார்க்க.

# புதிய சட்டத்தின்படி சகல நிதி நிறுவனங்களும் மத்தியவங்கியின் தீவிர கண்காணிப்பில்

நிதி நிறுவனமொன்றினை புதிதாக ஆரம்பிப்பதற்கு அந்நிறுவனம் ஐந்து மில்லியன் ரூபாவை மூலதனமாகக் கொண்டிருத்தல் வேண்டுமென மத்திய வங்கி பணித்துள்ளது.

நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யும் வாடிக்கையாளர்களின் நலன்கருதியே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை 1988ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நிதி நிறுவனச்சட்டம் இல. 78 இன் பிரகாரம் இதுவரை இருபத்தியொரு நிதிநிறுவனங்கள் மீண்டும இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ளன. இவற்றில் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் இயங்கும் ஷப்றா யூனிக்கோ பினான்ஸ் (ஷப்றா)) லிமிற்றெட்டும் ஒன்றாகும்.

நிதிநிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு இந்தச்சட்டம் பரந்த அளவிலான அதிகாரங்களை அளித்துள்ளன.

இச்சட்டத்தின்படி நிதி நிறுவனமானது தனியார் நிறுவனமாக அல்லாது பொது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

நிதி நிறுவனம் ஒன்றின் இயக்குநரோ அன்றி பணியாளரோ தவறு செய்தாலோ, மோசடி செய்தாலோ அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இச்சட்டம் வழி வகுக்கின்றது. மேலும் அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படின் கடுமையான தண்டனைகள் அவர்களுக்கு விதிக்கப்படும். மோசடி பணம் கையாடல் போன்ற குற்றங்கள் மிகவும் பாரதூரமான குற்றங்களாகக் கருதப்பட்டுத் தண்டனை விதிக்கப்படும்.

மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் பணவைப்புக் காப்புறுதித் திட்டம் பணவைப்பாளர்களுக்கும் பாதுகாப்பாக அமையும். நிதிநிறுவனங்கள் செயலிழக்க நேருமிடத்து நஷ்டஈடு கோருவதற்குப் பணவைப்பாளர்களுக்கு வாய்ப்பு உண்டு.

இந்தச் சட்டம் பணவைப்பாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி பணத்தை வைப்பிலிட ஊக்குவிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மொராக்கோவில் 44 பேர் பலி

மொராக்கோ தேசத்தின் வடபகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 44 பயணிகள் கொல்லப்பட்டனர், ஐவர் படுகாயமுற்றனர்.

இந்த பஸ்வண்டி குடைசாய்ந்து ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. (ப5)

## மெய்வல்லுநர் போட்டி

நாவற்குழி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி 30ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதன் முன்னோடி நிகழ்ச்சியான மரதன் ஓட்டம்27 ஆந் திகதி நடைபெறும்.

வித்தியாசாலை அதிபர் செ.நா.சத்தியநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விளையாட்டுப் போட்டிக்கான முழு ஏற்பாடுகளையும் ஆசிரியர் குழு மேற்கொண்டுள்ளது.

## சமூகசேவை இடமாற்றம்

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக யாழ் அரச செயலகத்தின் வடபுறத்தில் தனிப்பட்ட ஒரு கட்டி...

## பனை ஓலைத் தொப்பிகளுக்கு வடக்கில் இப்போது பெரும்மவுசு

வடபகுதியில் பனை ஓலைத் தொப்பிகளுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தற்போதைய கோர வெயிலுக்கு ஈடு செய்யுமுகமாகப் பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் பெரிதும் சுய விருப்புடன் ஓலைத் தொப்பிகளையே பாவித்து வருகின்றனர். இதனால் ஓலைத் தொப்பிகளின் விலை 15 ரூபாவிலிருந்து 32 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதுவரை காலமும் இறக்குமதி செய்யப்பட்ட துணிகளாலான பல்வேறு வகையான தொப்பிகளே கிராக்கியுடன் பயன்படுத்தப்பட்டு வந்தன. (50)

## வவுனியா தென்பகுதி ஊழியர்களுக்கு மார்ச் 31வரை விசேட விடுமுறை

வவுனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு, வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர்பிரிவு பகுதிகளில் உள்ள அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் விசேட விடுமுறை சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இவ்விரு பகுதிகளையும் சேர்ந்த அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஜனவரி மாதம் 18ஆம் திகதி முதல் இவ்வருடம் மார்ச் 31 ஆம் திகதி வரை கடமைக்கு சமூகமளிக்காதிருந்தால் அக்காலப்பகுதி விசேட விடுமுறையாகக் கருதப்படும்.

இது இவ்வாறிருக்க இந்த இரு பகுதிகளையும் சேர்ந்த ஊழியர்கள் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் கடமைக்கு சமூகமளிக்க வேண்டுமெனவும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பணித்துள்ளது.

## அசோக் வீரமரணம்

கடந்த 22ஆம் திகதி கிலாவத்துறையில் இடம்பெற்ற நேரடி மோதலில் அசோக் (கனகரத்தினம் மோகனதாஸ்—திமிலதீவு புத்தூர் மட்டக்களப்பு) வீரமரணம் அடைந்தார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## அக்கரைப்பற்று சம்பவத்தில் மேலும்பலர் பலி மீன்பெட்டியில இருந்த குண்டே வெடித்தது

அக்கரைப்பற்றில் நேற்று ...

...பட்டோர் அனைவரும் முஸ்லிம்களாவர், காயமடைந்...

## தாதியர் பயிற்சி நெறி

யாழ் போதனா வைத்தியசாலையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சி நெறி தாதியர் பயிற்சிப்பாடசாலையில் எதிர்வரும் ஏப்பிரல் முதலாந்திகதி ஆரம்பமாகவிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-11)

## கண்டி விழாவில்...

இம்மாத இறுதியில் கண்டியில் நடைபெறவுள்ள தமிழ் சாகித்திய விழாவில் 3 தமிழ் எழுத்தாளர்களுக்கு விருதுகளும், 4 தமிழ்ச் சான்றோர்களுக்குக் கௌரவமும் அளிக்கப்படவுள்ளதாக இந்து சமயக்கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது

யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைதடி சித்தவைத்தியப் பகுதியில் சிற்றுண்டிச் சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்...

## 'திருப்பாடுகளின் காட்சி' உலகின் பலபகுதிகளில் நடைபெறுகிறது

உலகின் பல பகுதிகளிலும் இவ்வாரம் யேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சி இடம் பெற்று வருகின்றன.

மேற்குலக வரலாற்றில் யேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சி பவேரியா நாட்டில் புகழ் பெற்று விளங்குகின்றது.

1634 ஆம் ஆண்டு பவேரியாவில் கொள்ளை நோய் ஏற்பட்டது. எனவே அந்நாட்டுமக்களின் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை யேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சியை அந்நாட்டு மக்களைக் கொண்டே வழங்குவதாக உறுதிபூண்டனர். அதன் பின்னர் அந்நாட்டில்கொள்ளை நோயினால் ஒருவரும் இறக்கவில்லை இன்றும் அங்கு இந்தப் பாரம்பரிய பழக்கம் தொடருகின்றது.

இத்திருப்பாடுகளின் காட்சி ஜேர்மனியில் மட்டுமின்றி ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியாநாடுகளிலும் புகழ்பெற்று விளங்குகின்றது.

## தமிழகத் தேர்தல் களம்

### 'கதறியழுதாவது வோட்டுக்கேளுங்கள்'

''இம்முறை நாம் வெற்றி பெறுவது தன்மானப் பிரச்சினை. அதற்கேற்ப உழைக்கவேண்டியது உங்களது கடமை. கதறி அழுதாவது வோட்டுக் கேட்கவேண்டும். இப்போது கதறியழவில்லையென்றால், நாம் தேர்தலுக்குப் பின்னர் கட்டாயமாகக் கதறியழ வேண்டிய நிலைமை 'ஏற்படும்''.

இவ்வாறு கலைஞர் மு கருணாநிதி தி.மு.க பொதுக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் தொண்டர்களைக் கேட்டுக்கொண்டார்.

### 'அம்மாமனசுல என்ன இருக்குன்னு புரியலே'

தேர்தல் டிக்கட்கேட்க ஒரு தொண்டர் அதிமுக தலைவர்களில் ஒருவரான நெடுஞ்செழியனின் இல்லத்துக்கு வந்தார். 'வாய்யா வா... எலெக்ஷனா?.மனுவா? எந்தத் தொகுதிக்கு?' என்று நெடுஞ்செழியன் நயமாக விசாரித்தார். வந்த தொண்டர் ஆவலோடு விவரம் சொன்னார்.

ஜெயலலிதாவிடம் தனக்குப் பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். நெடுஞ்செழியனுக்குச் சிரிப்பு ஒரு பக்கம்... வேதனை ஒருபக்கம்... 'தாய் கும்பகோணத்தில் தண்ணீர்ப் பிச்சை எடுத்தாளாம். மகன் பழனி பஞ்சாமிர்தம் கேட்டானாம்' எனக்கு எந்தத் தொகுதின்னு இன்னும் எனக்கே தெரியலே. அந்த அம்மா மனசுல என்ன இருக்குன்னும் புரியலே.

இந்த லட்சணத்துல நான் உனக்குச் சிபாரிசு செய்யணுமா?... என்று பல்லைக்கடித்துக்கொண்டு அவருக்கே உரிய பாணியில் சற்று இழுவை ராகம்போட்டுக் கூறினாராம்.

### ஆட்சி கலைத்துப் பழிதீர்த்தார் ஆர். வி

''பத்தாண்டு காலமாக இருந்த பகையை ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தற்போது நமது ஆட்சியைக் கலைத்து தன் மூலம் தீர்த்துக் கொண்டார்'' என்று தி. மு. க. தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

''1980-ல் நமது கட்சிக்கும் இந்திரா காங்கிரஸுக்கும் தேர்தல் உடன்பாடு ஏற்பட்டது. அதனோடு காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசியவர் ஆர். வெங்கட்ராமன் தான். உடன்பாட்டுக்குப் பின்னர் இருவரும் கைகுலுக்கச் சென்றோம். அப்போது ஒரு கருத்தை அவர் என்னிடம் சொன்னார். 'நாம் இருவரும் சேர்ந்து மூப்பனை மூப்பனார் என்று கூட அவர் சொல்லவில்லை, மூப்பனைக் குளோஸ் செய்ய வேண்டும்' என்றார் வெங்கட்ராமன். நான் உடனே கையை உருவிக் கொண்டேன். ஆரம்பமே சரியில்லை என்றும் அவரிடம் சொன்னேன். அப்போது அவர் முகம் மாறிவிட்டது.

அரச செயலகத்தின் வடபுறத்தில் தனிப்பட்ட ஒரு கட்டிடத்தில் இயங்கிவந்த சமூக சேவைப்பகுதி, அரச செயலகத்தின் பிரதான கட்டிடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

யாழ் செயலகத்தின் கணக்குப்பகுதி, ஓய்வூதியப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதனைத்தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இப்பகுதி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (47)


★ உங்களுக்குத் தேவையான புகைப்படங்கள்
★ றபர் சீல்
★ HALF TONE - LINE கலர் புளொக்ஸ் (BLOCKS)
★ கலர் பிலிம் சுருள்கள்
★ ஓவிய வேலைகள்
★ கலர் பிலிம் சுருள்களைப் படமாக்குதல்
★ பிறேம் போடுதல்
★ கிரிக்கேஸ் போடுதல்
கிரிக்கேஸ் தயாரிப்பாளர்கள்

## கொழும்பு ஸ்ருடியோ

55, மணிக்கூட்டுவீதி,
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

245, நாவலர்வீதி,
யாழ்ப்பாணம்.
03083


அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இறந்தோரின் தொகை பத்தாக அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீன் சந்தைக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றில் இணைக்கப்பட்டிருந்த மீன்பெட்டிக்குள்ளேயே இக்குண்டு வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர் அனைவரும் முஸ்லிம்களாவர், காயமடைந்தோரில் அனேகமானோர் ஆண்களாவர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு அக்கரைப்பற்று பொதுச்சந்தையில் 'ஞாயிறு சந்தை' கூடிய போதே இக்குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. காயமடைந்தோரில் 20 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக்குண்டுவெடிப்பினால் சந்தையில் ஒருபகுதி தீக்கிரையாகியுள்ளது


## சிறு விளம்பரம்

வகுப்பு

S. L. E. A. S. துரித பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 30 3.91. அச்சடித்த பாடக்குறிப்புகளும் மாதிரி வினாவிடைகளும் இலவசம் முழுக்கட்டணம் ரூபா 250.00 School of Business Administration, 16, 3வது குறுக்குவீதி, யாழ்ப்பாணம். 03117


சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 1991. 04. 10 ஆந் திகதி நண்பகல் 12. 00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500 /-உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/-உம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்

25. 03. 91

03012

உருவிக் கொண்டேன். ஆரம்பமே சரியில்லை என்றும் அவரிடம் சொன்னேன் அப்போது அவர் முகம் மாறிவிட்டது. இந்தக் காரணங்களையெல்லாம் வைத்துக் கொண்டு இப்போது தனது பழியைத் தீர்த்துக் கொண்டார் அவர்'' என்றும் கலைஞர்கூட்டமொன்றில் பேசுகையில் மேலும் கூறினார்

## ஒன்பதுபேர் புடைசூழ ஜெயலலிதா

ஜெயலலிதாவுக்கு ஒன்பதாம் நம்பர் மிக ராசியானது என்று கூறியுள்ளார் இந்தாரிப் பேட்டை ஜோதிட நிபுணர் டி. டி. வி. ராமன்.

''ஜெயலலிதாவின் ஜாதகப்படி அவருக்கு அரசியல் செல்வாக்குத் தரும் கிரகம் செவ்வாய் அவருக்கு இப்போது செவ்வாய் திசை நடைபெறுகிறது. செவ்வாயின் எண்ணான ஒன்பதுதான் அவருடைய அதிர்ஷ்ட நம்பர். அவருடைய வீட்டு நம்பரும் கூட முப்பத்தாறு இதன் கூட்டுத்தொகையும் ஒன்பது தான்.

அவருடைய கார் நம்பரின் கூட்டுத்தொகையும் ஒன்பது தான், இதனால் அவருடைய ஆலோசனைக் கூட்டங்களில் அவருக்கு இருபுறமும் ஒன்பது பேர் வீதம் அமர்ந்திருப்பார்கள்'' என்றும் அவர் விளக்கினார்.

## நெற்சந்தைப்படுத்தும் சபை - இனி அரிசியையும் கொள்வனவு செய்யும்

நெற்சந்தைப்படுத்தும் சபை இனிமேல் அரிசியையும் நேரடியாகக் கொள்வனவு செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது

முன்னர் நெற்சந்தைப்படுத்தும்சபை நெல்லை மட்டுமே கொள்வனவு செய்து வந்தது.

இத்திட்டத்தின்கீழ் முதற் கட்டமாக பத்தாயிரம் மெட்ரிக்தொன் அரிசி கொள்வனவு செய்யப்படவுள்ளது.

★ உயர் கல்வித்துறை பற்றிய ஆய்வு தெரிவிக்கும் தகவல்

## பல்கலைக்கழகங்களின் கல்வித்தரம் வீழ்ச்சி!

# பட்டதாரிகள் பலருக்கு தொழில் வாய்ப்பு இல்லை!!

இலங்கை பல்கலைக்கழகங்களின் கல்வித்தரம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி அடைந்து வருவதாக உயர் கல்வித்துறை பற்றி ஆய்வினை மேற்கொண்ட சில கல்விமான்கள் தெரிவித்துள்ளனர்.

'உயர் கல்வித் தகைமைகளைப் பெற்ற பேராசிரியர்கள் பல்கலைக்கழகங்களை விட்டு பிற நாடுகளுக்கு வெளியேறி வருகின்றனர். பல்கலைக்கழகங்கள் வழங்கிய சம்பளங்களும் ஏனைய வசதிகளும் பேராசிரியர்களைக் கவரவில்லை.'

'சில போதனா பீடங்களில் 50 வீதமான விரிவுரையாளர் பதவிகள் நிரப்பப்படவில்லை. இப்பதவிகளை நிரப்புவதற்கு போதுமான உயர் கல்வித் தகுதியுடையவர்கள் நாட்டிலே இல்லை. இந்நிலையில் குறைந்த தகுதிகளுடையவர்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் பல்கலைக்கழகங்களுக்கு ஏற்பட்டு விட்டது. இதுவே பல்கலைக்கழகங்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருகின்றமைக்கான முக்கிய காரணமாகும்' என இந்த கல்விமான்களின் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் உள்ள ஏனைய முக்கிய புள்ளிவிபரத் தகவல்கள் வருமாறு:

★ பல்கலைக் கழகங்களில் இருந்து வெளியேறிய 3000 - 4000 பட்டதாரிகளில் பெரும்பாலானோருக்கு வேலை வாய்ப்புக்களும் கிடைக்கவில்லை. குறைந்தபட்சம் ஆசிரியர் பதவிகளைப் பெற்றுக் கொள்வதும் பட்டதாரிகளுக்கு தற்போது சிரமமாகிக் கொண்டு வருகின்றது.

★ வருடந்தோறும் 180,000 பேர் வரை க. பொ. த. உயர் தரப்பரீட்சைக்கு அமர்கின்றனர். அவர்களில் 35,000 பேர் பல்கலைக்கழக அனுமதித் தகைமையை பெறுகின்றனர் இவர்களில் 18,000 பேருக்கே அனுமதி கேட்டு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆனால் அனுமதி சுமார் 9000 பேருக்கு மட்டுமே இட்டுகிறது.

★ இலங்கை மக்கள் தொகையில் ஒரு வீதமானவர்கள் மட்டுமே பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்கள் அத்துடன் 14 வீதமானவர்களே க. பொ. த. உயர் நிலைக் கல்வித் தகுதிகள் கொண்டவர்கள். மேலும் 18-25 வயதுப் பிரிவினரில் இரு வீதமானவர் மட்டுமே பல்கலைக்கழகங்களில் பயிலுகின்றனர்.

## மாகாண அமைப்பின் கீழ் உப சபைகளை ஏற்படுத்துவது குறித்து இன்று ஆராயப்படும்

வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண அமைப்பின் கீழ் இரு உப சபைகளை ஏற்படுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்ட ஆலோசனை குறித்து இன்று கொழும்பில் ஆராயப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு இணைந்த அமைப்பின் கீழ் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் என தனித்தனியாக இரு உப சபைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் ஆலோசனை தெரிவித்துள்ளன.

### பல்கலைக்கழகத்தில்

## இராமாயணத்துக்கும் இடம்

வால்மீகி எழுதிய சமஸ்கிருத மொழியிலான இராமாயணத்தை பேராசிரியர் ரிச்சேட் கோம்பிரிஜ் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வருகின்றார். இதன் வெளியீட்டுக்கென அமெரிக்க அரசு இருபதாயிரம் டொலர்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இரு வருடங்களுக்குள் இம்மொழி மாற்ற இராமாயணம் வெளிவந்து விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது பல்கலைக்கழகப் பாட நூல்களில் ஒன்றாகக் கணிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (16)

## புத்தளத்தில் 46 தமிழ் பாடசாலைகளில்

## தமிழ் கல்வி அதிகாரி எவருமில்லை

புத்தளம் மாவட்டத்திலுள்ள தமிழ்ப்பாடசாலைகளின் கல்வித்தரம் அரசின் திட்டமிட்ட நடவடிக்கையினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது புத்தளம் கோட்டக்கல்வி அதிகார எல்லைக்குள் இயங்கும் 46 தமிழ் மொழிமூல பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒரு தமிழ்க்கல்வி அதிகாரிகூட அங்கு நியமிக்கப்படவில்லை.

ஆனால் இம்மாவட்டத்தில் புத்தளம் தொகுதியில் மட்டும் 33 சிங்களப்பாடசாலைகள் உள்ளன. இவற்றை பரிபாலனம் செய்வதற்கு சிங்கள கல்வி அதிகாரிகள் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான திட்டமிட்ட நடவடிக்கைகளினால் அப்பகுதியில் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## நந்தாவில் கும்பாபிஷேகம்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் 27 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

25 ஆம் திகதி திங்கட்கிழமை கிரியைகள் ஆரம்பமாகி இன்று எண்ணெய் சாத்தும் வைபவம் இடம்பெறுகிறது.

## பாணின் விலையைக்குறைப்பதில் பேக்கரிகளிடையே போட்டி!

பருத்தித்துறை, புலோலிப் பகுதியில் நிர்ணயவிலையிலும் பார்க்ககுறைவான விலைக்குப் பாண் விற்கப்படுகின்றது.

இப் பகுதிகளில் 350 கிராம் எடையுள்ள பாண் எட்டு ரூபாவாகவும், எட்டு ரூபாய் ஐம்பது சதமாகவும்

(நேற்றைய தொடர்ச்சி)

# தமிழீழத்தில் இந்திய ஊடுருவல்

### வஞ்சகமும், சூதும், வழிநடப்பும்

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் சிறீலங்காவுடன் புதிதாக நட்புறவை வளர்த்துக் கொள்ள விரும்பிய டில்லி ஆட்சிபீடம் சுன்னாவைக் கொழும்புக்கு அனுப்புவதற்கு முன்னதாக தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடவடிக்கைகளில் இறங்கியது. முதலில் எமது விடுதலை இயக்கத்தை மாசுபடுத்தும் அபாண்டமான பொய்ப்பிரசாரங்களை இந்திய அரசு திட்டமிட்டுச் செய்தது. தமிழ்நாட்டில் சிகிச்சை பெற்றுவந்த எமது போராளிகள் கைது செய்யப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டனர். எமது சக்தி வாய்ந்த தகவல் தொடர்புச் சாதனங்கள் பறித்தெடுக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் சிகரம் வைப்பதுபோல சுன்னா கொழும்பில் இருந்த சமயம், விடுதலைப்புலிகளுக்கு உதவுவதாகப் பொய்யான காரணம் காட்டித் தமிழ்நாட்டு அரசு கலைக்கப்பட்டது.

### புலிகளுக்கு எதிராக......

நாம் விடுதலைப் புலிகளுக்கு விரோதமானவர்கள், தமிழரின் சுதந்திரப் போராட்டத்திற்கு எதிரானவர்கள், இந்திய மண்ணில் செயற்படப் புலிகளுக்கு ஒருபோதும் இடமளியோம் என்பதைச் சிங்கள அரசுக்குச் செயல் மூலம் நிரூபித்துக் காட்டிப் பிரேமதாசாவின் நம்பிக்கையைப் பெற இந்தியா விரும்பியது. புலிகளுக்கு எதிரான யுத்தத்தால் ஆட்டம் கண்டிருக்கும் பிரேமதாசாவிற்கு, இந்திய அரசு முண்டு கொடுக்க முன்வந்தது பெரும் மகிழ்ச்சியை அளித்தது. பாரத அரசின் உலகளாவிய ராஜதந்திரத் திரைக்குப் பின்னால் ஒளிந்து நின்று தமிழருக்கு எதிரான இனப்படுகொலையைத் தொடர்ந்து நடத்தலாம் என எண்ணினர் போலும்.

### இந்தியாவின் குறிக்கோள்

உள்நாட்டில் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களுக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு என்னவென்பதை சிங்கள ஆளும் வர்க்கம் நன்கறியும். சிறீலங்காவின் இனவாத அடக்குமுறைக் கொள்கை எப்படியானது என்பதை இந்திய ஆளும் வர்க்கம் நன்கறியும். எனவே ஒரு பொதுவான இலட்சியத்தில் இரு ஆளும் வர்க்கங்களும் ஒன்றிணைந்து செயற்பட முன்வந்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்தப்பொது இலட்சியத்தில் தமிழர் நலன்கள் பாதிக்கப்படுவதை இந்தியா பொருட்படுத்தாது அதேபோல, இந்தப் பொதுவான குறிக்கோளை அடைவதற்கு இலங்கைத் தீவின் இறைமைக்குப் பங்கம் ஏற்படுவதையும் சிறீலங்கா பொருட்படுத்தாது.

### ஜாவின் பேட்டி

இந்தப் புதிய ராஜதந்திரத் தலையீட்டில் இந்தியா, தமிழர் பிரச்சினையை எப்படி அணுகுகிறது, எந்த வகையில் சிறீலங்காவுக்கு உதவியளிக்க விரும்புகிறது, தமிழர் தாயகத்தின் நில வளங்களை எப்படிச் சுரண்ட விழைகிறது என்பதைத் தெளிவாக விளக்கும் வகையில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா சமீபத்தில் (17-2-91) 'ஐலண்ட்' ஞாயிறு இதழுக்கு ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார்.

குறிப்பாக முக்கிய உதவி வழங்கும் நாடுகள் எல்லாம் இந்த முழு விவகாரம் பற்றி (குண்டு வீச்சுப் பற்றி) ஆழ்ந்த அதிர்ச்சியைத் தெரிவித்தார்கள். நாம் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. எமக்கு உங்கள் பிரச்சினை நன்கு புரியும். விமானப் பலத்தைக் கொண்டு கிளர்ச்சிகளை நசுக்குவது முற்றிலும் நியாயமானதே. ஆனால் அந்தக் குறிக்கோளுக்கு அமைய நீங்கள் அதனைப் பிரயோகிக்க வேண்டும்'' என்கிறார் இந்தியத் தூதுவர். இந்தக் கூற்றிலிருந்து ஒன்று தெளிவாகிறது. சிறீலங்கா குண்டுவீச்சு விமானங்கள் வான்வழி தாக்குதலை அல்லது குண்டு வீச்சுக்கள் நடத்துவதையோ இந்தியா ஆட்சேபிக்கவில்லை. ஆனால் குண்டுவீச்சுக் காரணமாகப் பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்படும் தகவல்கள் வெளியுலகத்திற்கு எட்டி வருவது இந்தியாவுக்குச் சங்கடத்தைக்கொடுக்கிறது. மேற்குலகமே அதிர்ச்சியடையும் போது இந்தியா மௌனம் சாதித்து வருகிறது. சிறீலங்காவைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக உண்மை தெரிந்தும் உலக அரங்கில் இந்தியா ஆட்சேபனைக் குரலெழுப்பவில்லை. தமிழரின் இனப்படுகொலையை மூடிமறைக்க இந்தியா சிங்கள அரசுக்குத் துணை போகிறது என்பதுதான் இதன் அர்த்தம்.

### ஆயுத உதவி, பயிற்சி, அரவணைப்பு

ஆண்டுதோறும் இந்தியாவில் 700 க்கும், 800 க்கும் இடைப்பட்ட தொகையில் சிங்கள இராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதாகத் தகவலை வெளியிட்ட இந்தியத் தூதுவர் சிறீலங்காவின் ஆயுதத்தேவைகளைப் பூர்த்தி செய்யவும் இந்தியா தயங்காது என்ற தொனியில் பேசியிருக்கிறார். '' உங்களுக்கு இப்பொழுது தேவைப்படுவது சிறிய ரக ஆயுதங்கள் போலத் தெரிகிறது'' என அவர் குறிப்பிட்டதைப் பார்த்தால் அந்த ஆயுதங்களை இந்தியா கொடுத்துதவ ஆயத்தமாக இருக்கிறது என்ற அர்த்தம் தொனிக்கிறது. அப்படித்தான் இந்திய அரசு சிறீலங்காவுக்கு ஆயுத உதவி செய்வதற்கு முன்வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆயுதக் கொள்வனவில் சீனாவிடமும், பாகிஸ்தானிடமும் தங்கியிராது சிங்கள அரசு தன் மீது தங்கியிருப்பதை இந்தியா விரும்பக்கூடும் இந்தியாவின் இன்றைய தலையீட்டில் இது ஒரு புதிய பரிமாணமாகவும் அமையலாம்.

### தமிழீழம் அமைந்தால்.......!

தமிழீழம் சுதந்திரப்போரில் விடுதலைப் புலிகளின் கை ஓங்கி வருவதை இந்தியா விரும்பவில்லை. தொடர்ச்சியாக சிங்கள இராணுவம் தோல்விகளைச் சந்தித்து வருவதும் இந்திய ஆளும் வர்க்கத்திற்கு அச்சத்தைக் கொடுத்திருக்கிறது. தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போர் வெற்றிபெறும் வாய்ப்பு ஏற்பட்டால் அது இந்திய ரீதியில் அதுபாரிய தாக்கங்களை விளைவிக்குமென டில்லி ஆட்சிபீடம் பயப்படுகிறது. ஆகவே சிங்கள இராணுவம் பாரிய தோல்விகளைச் சந்தித்து அரசின் ஸ்திர நிலை குலைவதற்கு முன்னர் சிறீலங்காவுக்கு கை கொடுத்து உதவ முன்வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் வேண்டுமென்றால் ஆயுத உதவியையும் செய்யத் தயக்கம் போவதில்லை. பிரேமதாசா அரசை

டும் 33 சிங்களப்பாடசாலை

பாண் விற்கப்படுகின்றது.

ரூபாய் ஐம்பது சதமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இங்குள்ள பேக்கரிகள் போட்டி போட்டுக்கொண்டு பாண் விலையினைக் குறைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

யாழ் மாவட்டத்தில் 350 கிராம் பாணுக்கான நிர்ணய விலை பத்து ரூபா ஐம்பது சதம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (50)

## கைதடிப் பகுதியில் கட்டுப்பாட்டை மீறிய ஒன்பது வர்த்தகர்களுக்கு அபராதம்

கைதடி நாவற்குழிப் பிரதேசத்தில் சன்லைற், சீனி, தேங்காயெண்ணெய், பாண் போன்ற பொருட்களைக் கூடுதலான விலைக்கு விற்ற ஒன்பது வியாபாரிகளுக்கு கைதடி வட்டப் பொறுப்பாளரினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரியிலிருந்து வந்த விலைக்கட்டுப்பாட்டு கண்காணிப்புக் குழுவினர் பொருட்களை விலைகூட்டி விற்பனை செய்த கைதடி, நாவற்குழி தெற்குப்பகுதி வியாபாரிகள் மூவரையும் தச்சன்தோப்பு நாவற்குழிப் பகுதி வியாபாரிகள் மூவரையும், கைதடிப் பகுதி வியாபாரிகள் மூவரையும் கையும் மெய்யுமாகப் பிடித்து கைதடி வட்டப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வியாபாரிகளுக்கு 250 ரூபா முதல் 750 ரூபா வரை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ப-5)

## உள்ளூராட்சி தேர்தலில் விருப்பு வாக்குகள் மூன்றையும் ஒருவருக்கே செலுத்த வாய்ப்பு

உள்ளூராட்சித் தேர்தல் கடமைக்கென ஊழியர்கள் தெரிவு செய்யப்படும் போது நாற்பது சதவீதம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுமென தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இவ்விகிதாசார முறைப்படி நடக்கும் முதலாவது உள்ளூராட்சித் தேர்தலாக இது கருதப்படுகின்றது.

அத்துடன் வாக்காளர் ஒருவருக்குக் கொடுக்கப்படும் மூன்று விருப்புக்குரிய வாக்குகளையும் ஒரே வேட்பாளருக்கே செலுத்தக் கூடிய வசதி இந்தத் தேர்தலில் வழங்கப்பட்டுள்ளது.

## இந்திய விமான விபத்தில்

## 25 விமானப் பயிலுநர்கள் பலி!

பெங்களூர் அருகே நேற்றுக் காலை நிகழ்ந்த விமான விபத்தொன்றில 25 பேர் மரணமாகினர்.

இது பாரத விமானப் படையின் பயிற்சி விமானமாகும். 25 பேர் பயிற்சி பெறுபவர்கள், ஏனைய 3 பேரும் அதிகாரிகளாவர்.

### உள்ளடக்கம் இதுதான்...

இந்தப் பேட்டியிலிருந்து பழையபடி ராஜீவ்—ஜே. ஆர் ஒப்பந்தத்திற்கமைய செத்துப்போன மாகாண சபைக்கு புத்துயிர் ஊட்டவே இந்தியா விரும்புகிறது என்பது தெளிவாகிறது. அதுவும் தேர்தல் நடத்தாமல், புலிகள் இயக்கத்தை ஒதுக்கி விட்டு, இடைக்கால மாகாண சபை நிர்வாகம் ஒன்றை நிறுவி, இந்தியாவின் அடிவருடிகளாக இயங்கிய இனத்துரோகக் குழுக்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென ஆலோசனையும் கூறப்படுகிறது. யுத்தம் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பரவாயில்லை. இப்படியான ஒரு இடைக்கால நிர்வாகம் அமையப்பெற்றால் தமிழரையும் திருப்திப்படுத்தலாம். அதேவேளை புலிகளையும் அரசியல் ரீதியாக அந்நியப்படுத்தி விடலாம் என்பது போல அவரது கருத்து அமைகிறது. சீனாவிடமிருந்து குண்டு விமானங்களைப் பெறுவதில் இந்தியாவுக்கு ஆட்சேபனை இல்லையென்றும் ஏனென்றால் இவ்விமானங்கள் உள்நாட்டுப் பாதுகாப்புத் தேவைகளுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன என்றும் ஜா கூறுகிறார். ''பயங்கரவாதிகளின் நிலைகளை அழிப்பதற்கு விமானங்கள் பாவிக்கப்படுவது நியாயமானதே. ஆனால் இந்த விமானத் தாக்குதல்களால் வடக்கில் பெருந் தொகையில் பொதுமக்கள் உயிரிழப்பதாகத் தொடர்ந்து செய்திகள் வெளியாகி வருகின்றன. கடந்த மாசி 7 ஆம் திகதி சிறீலங்காவுக்கு உதவியளிக்கும் நாடுகளின் மாநாடு நடைபெற்றது. திரு. பாஸ்கரலிங்கமும் இதில் கலந்து கொண்டார். அப்போது மேற்கத்தைய நாடுகள்

ஆட்டம் காணவிடாமல் ஸ்திரநிலையில் வைத்திருப்பது இந்தியாவின் பொருளாதார நலன்களைப் பேணுவதற்கும் வாய்ப்பளிக்கும். ஏற்கனவே இந்தியாவுக்கும், சிறீலங்காவுக்கும் மத்தியில் கூட்டுப் பொருளாதார உடன்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. திருக்கோணமலை எண்ணெய்க் குதங்களைச் சீரமைத்து இந்தியக் கடற்படையின் பாவனைக்கு அனுமதிக்க சிங்கள அரசு இணங்கியிருக்கிறது. அடுத்ததாக மன்னாருக்குடா கடற்படுக்கையிலுள்ள பாரிய எண்ணெய் வளத்தை ஆராய்ந்து அந்த எண்ணெயை இருநாடுகளும் பகிர்ந்தெடுப்பது.

### தமிழீழச் சொத்துச் சுரண்டல்

திருமலைத் துறைமுகமும், மன்னார் கடற்பிரதேசமும் தமிழர் தாயகத்தில் அமையப்பெற்றிருக்கின்றன. இந்தப் பிரதேசங்கள் தமிழீழ மக்களின் சொத்துடைமை. இந்தப் பிரதேசங்களிலுள்ள மூல வளங்கள் அனைத்தும் தமிழீழ மக்களுக்குச் சொந்தமானவை. எனவே எமது மக்களின் அனுமதியின்றி, எமது மக்களைக் கலந்தாலோசிக்காமல், இரு அந்நிய நாடுகள் எமது மக்களுக்கு உரித்தான செல்வத்தைச் சுரண்டுவதற்கு திட்டமிட்டுள்ளன. இது எமது மக்களின் பிரதேச ஆட்சியுரிமையைப் பாதிக்கும் பாரதூரமான விடயம். (வளரும்)

சித்தராக விளங்கிய சிவயோகசுவாமிகளுக்கு நல்லூர் என்றால் உயிர். செல்லப்பா சுவாமிகள் அவரை ஆட்கொண்டது நல்லூர்த் தேரடியில் அல்லவா?

நல்லூர் முருகனை நினைக்குந்தோறும் மற்றெல்லாவற்றையும் மறந்து விடுகிறார் யோகசுவாமிகள். 'தேவர் சிறைமீட்ட வடிவேலன் இருபாதமும் காவலாக இருக்கையில் கவலை ஏது?' என்று இறுமாந்து பாடுகிறார் நம் ஈழத்துச் சித்தர்.

சித்தர்கள் முக்காலமும் உணர்பவர்கள். படை வராத ஒரு காலத்திலேயே படைவருவது பற்றியும், எமது மண் வெந்துபோவது பற்றியும் பேசிய யோகர் நற்சிந்தனையை அவர் திருநாளில் வெளியிடுகிறோம்.

## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - இளியே!
இரவுபகல் காணேனெடி.

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி - இளியே!
நல்லூரான் தஞ்சமெடி.

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - இளியே!
கவலையெல்லாம் போகுமெடி.

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கத்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி.

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - இளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி.

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைத்தும்
பூமியில் சொன்னாலெடி - இளியே!
பொல்லாங்கு தீருமெடி.

கனகரத்தினம் ம. வி. மாணவர்களுக்கு பாடசாலைகளில்

# மதிய உணவு முத்திரைக்கான பொருள்களை யாழ் பல நோ. கூ. சங்கம் நேரில் விநியோகம்

மதிய உணவு முத்திரைக்குரிய பொருள்களை அந்தந்தப் பாடசாலைகளிலேயே வைத்து வழங்க யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நேற்று இப் பாடசாலையிலேயே வைத்து முத்திரைகளுக்கான பொருள்கள் வழங்கப்பட்டன.

இதனால் மாணவர்கள் கூட்டுறவுக் கடைகளில் கியூவில் நின்று காவல் இருப்பதைத் தவிர்த்துக் கொள்வதுடன், கல்வி நேரத்தையும் வீணாக்காமல் போகிறது என்று இம் மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

யாழ் பல நோ. கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைகளை ஏனைய சங்கங்களும் செயற்படுத்தினால் மாணவர்கள் தற்போதைய கால கட்டத்தில் நேரத்தை வீணாக்காமல் கல்வியைத் தொடரலாம் எனக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

உணவு முத்திரைகளுக்குப் பொருள்கள் தேவைப்படும் பாடசாலைகள் தம்முடன் தொடர்பு கொண்டால் நேரில் அவற்றை விநியோகிக்க முடியும் என நல்லூர் பல நோ. கூ. சங்கம் அறிவித்திருந்தும் இதுவரை எந்தப் பாடசாலைகளும் இதற்கு விண்ணப்பிக்கவில்லை எனச் சங்கத் தலைவர் பொ. கனகசபாபதி தெரிவித்துள்ளார். (66)

## மேஜர் செங்கதிர் நினைவாக குடாநாடு எங்கும் அஞ்சலி நிகழ்ச்சி

வவுனியாவில் கடந்த மாதம் 25-ம் திகதி வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரப் பொறுப்பாளரும் செயற்குழு உறுப்பினருமான மேஜர் செங்கதிர் வீரவேங்கை சிந்து ஆகிய இருவரினதும் 30-ம் நாள் நினைவு தொடர்பாக நேற்று யாழ் மாவட்டம் முழுவதும் நினைவஞ்சலிக் கூட்டங்களும் அஞ்சலி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

பல இடங்களில் மேஜர் செங்கதிரினதும், வீரவேங்கை சிந்துவினதும் உருவப்படங்கள் வைத்து அலங்கரிக்கப்பட்டு மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஒலி பெருக்கிகளில் மேஜர் செங்கதிரின் இறப்பு உரைகள் ஒலி பரப்பப்பட்டன.

மேஜர் செங்கதிர் சிறந்த பேச்சாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (70)

## ஜே. வி. பி. - பொலிஸார் மோதல் ஒருவர் பலி; ஆயுதங்கள் மீட்பு

மொனராகலை கோன்கன்பிட்டிய 'உவனி' காட்டுப் பகுதியில் ஜே. வி. பி. முகாம் ஒன்றைப் பொலிஸார் முற்றுகையிட்டனர். இதனையடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது. ஒரு தீவிரவாதி கொல்லப்பட்டார்.

இந்த முகாமிலிருந்து ஆறு தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டதாகவும் சில ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

## சாவகச்சேரி நவத்துக்கு பாராளுமன்றத்தில் அனுதாபம்

முன்னாள் சாவகச்சேரி அங்கத்தவரான வி. என் நவரத்தினத்தின் மறைவுக்கு பாராளுமன்றத்தில் அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை நிறைவேறியது.

அரசாங்க, எதிர்க்கட்சித் தரப்பு எம். பிக்கள் 'நவத்தின், பண்புகள், சேவைகளைப் பாராட்டி பேசினார்கள்.

எம். பியான அப்துல் மஜீத் தமது உரையில், ''நானும் நவரத்தினமும் யாழ் மத்திய கல்லூரியிலும் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் ஒன்றாகவே படித்தோம்''

''6வது திருத்தச் சட்டம் நிறைவேறிய போது ஆற்றல்மிக்க மிதவாத தலைமைத்துவத்தை நாம் சபைக்கு வெளியே அனுப்புகிறோம் என மிகவும் வேதனைப்பட்டவர்களில் நானும் ஒருவன்'' என்றார். (74)

## அரச சேவை கடித உறைகள் பாவிப்பதில் புதிய முறை

அரச சேவை சலுகையைப் பயன்படுத்தும் அரச திணைக்களங்கள், எம். பிக்கள் தமக்கு வழங்கப்பட்ட கடித உறைகளை ஒரு மாதத்திற்கு முன்னதாக தபாற் கந்தோரில் ஒப்பமிடத்து 'சீல்' இடப்பட வேண்டும் என்ற புதிய முறை விரைவில் அமுலுக்கு வரவுள்ளது.

அரச சேவை என்வலப்பில் சிலர் குடும்பக் கடிதங்களை அனுப்புவதாகவும், அரசுக்கு எதிரான தீய சக்திகளும் இந்த முறையை பயன்படுத்துவதாகவும் தபால் அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (33)

## மாகாணங்கள் தோறும் பிரதி தபால் மா அதிபர்கள்

தபால் பிரதி மா அதிபர்கள் மாகாணங்களில் நியமிக்கப்படவுள்ளனர். இவர்கள் தபால் மா அதிபரின் கீழ் பணிபுரிவர்.

அத்துடன் தபால்களை ரயில், இ. போ. ச பஸ்களில் எடுத்துச் செல்வதைப்போல தனியார் வாகனங்களிலும் அனுப்ப பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

இதனால் தபால்கள் பொது மக்களுக்கு விரைவாகக் கிடைக்க வழிபிறக்கும் என தபால் அமைச்சின் செயலாளர் அசோகா குணசேகரா தெரிவித்தார். (33)

## மலையக மக்கள் முன்னணியும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டி

மலையக மக்கள் முன்னணி எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடப் போவதாக அதன் தலைவர் பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் தமிழர் அதிகமாக வாழும் பகுதிகளில் போட்டியிடப் போவதாகக் கூறிய அவர், தமிழர்களின் வாக்குகளை உரிய முறையில் பயன்படுத்தி தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை நிலைநாட்டப்போவதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கு இங்குள்ள தொழிற்சங்க அரசியல் கட்சிகளிடையே தேர்தல் போட்டித்தவிர்ப் [illegible]

கட்.-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

## சாமியின் அரசடி கிளையில் நிறையில் மோசடி கண்டுபிடிப்பு

கட்டைவேலி-நெல்லியடி பல நோ. கூ. சங்க சாமியின் அரசடி கிளையில் (இல 5) நிறுவையில் மோசடி செய்யப்பட்டபோது யாழ் உள்நாட்டு வர்த்தக திணைக்கள அளவைகள் நிறுவைகள் பரிசோதகர் கே. ஜே. ரூபேந்திரன் தலைமையிலான பரிசோதனைக்குழு கையும் மெய்யுமாகப் பிடித்தது.

இரு பாவனையாளர்களுக்கு அரிசி விநியோகிக்கும்போது 500 கிராம், 560 கிராமில் மோசடி செய்யப்பட்டபோது கிளையில் உள்ளவர்கள் அகப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்து சங்கத்தின் நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் உடுப்பிட்டி பல. நோ. கூட்டுறவு சங்க கிளை ஒன்றிலும் இவ்வாறு மோசடி நடைபெற்றது கண்டுபிடிக்கப்பட்டு முகாமையாளரும், விற்பனையாளரும் பதவி இடை நிறுத்தம் செய்யப்பட்டமை தெரிந்ததே. (15)

கடலில்...

தெரிவித்தார்.

''காரைநகர் முகாமில் வைத்து பெண்கள் உட்பட சகலரையும் புலிகள் என்று [illegible]

கிழக்கு...

முடிவில் இது பற்றி விவாதிக்கலாம் என்றார். உடனே சபையில் கூச்சல் ஏற்பட்டது. சாந்திசேவா சங்கத்தினர் வெளிநடப்புச் செய்தனர். 33

வடக்கு...

ரம் அகதிகளுக்கு உணவு, உடை, தங்குமிடம் கிடைக்கப் பயன்படுத்தப்படும்.

'யுனிசெப்' மூலம் வடக்குக் கிழக்கு பாடசாலைப் பிள்ளைகளின் தேவைகளுக்கு இப் பணம் பயன்படுத்தப்படும்.

முஸ்லிம் –

பதவியை ராஜினாமாச் செய்யாமல் இருந்து வருவதும் [illegible]

## தெல்லிப்பழையில் தமிழீழ மீட்பு நிதி

தமிழீழ மீட்பு நிதி செலுத்தி ஒப்புதலளித்த தெல்லிப்பழை உ. அ. அதிபர் பிரிவைச் சேர்ந்தோர் பங்களிப்பு செய்வதற்கு வசதி [illegible]

இளையில் உள்ளவர்கள் அகப் பட்டனர்.

## தமிழ்...

வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு அதனை விலக்கி வழக்காளிக்கு வேலை கொடுக்க மறுத்தது தவறு என்று கூறினார்.

அத்துடன் வழக்காளியின் வேலையிலும் அவரின் முழுச் சேவை காலத்தில் எவ்விதக் குற்றச் சாட்டுகளும் இல்லை என்பதையும் நீதிபதி சுட்டிக் காட்டினார்.

வழக்காளி மூன்று மாதங் களில் இளைப்பாறும் வயதை (55) அடையவிருப் பதால் அவருக்கு மீண்டும் வேலை கொடுப்பது பொருத் தமற்றது எனவும் கூறிய நீதிபதி, நட்டஈடாக 55 மாதச் சம்பளமாக ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 777 ரூபா வழங்குமாறு தீர்ப்பளித்தார்.

எயர் லங்கா நிறுவனமும் இதனை ஏற்று அவருக்கு அத் தொகையை வழங்கியது. (74)

"காரைநகர் முகாமில் வைத்து பெண்கள் உட்பட சகலரையும் புலிகள் என்று கூறித்தாக்கினர். அத்துடன் எமது சம்பளப்பணத்தையும் பறித்து நான்கு நாட்களாக இங்கு கொண்டுவந்து விட்ட னர்" இவ்வாறு அவர் சொன் னார். (ய-17)

## பாடசாலை...

வழங்கக் கூடாது என்று உயர் கல்வி அமைச்சின் செயலாளரு சகல பிரதேச கல்விப்பணிப் பாளர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

இதற்காக எவராவது விண் ணப்பித்தால் அதனைக் கல்வி யமைச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அரச திணைக்களங் கள், அரச கூட்டுத்தாபனங் கள் இவற்றைப்பாவிப்பதற்கு கல்வியமைச்சில் இருந்து அனு மதி பெறத்தேவையில்லை எனவும், அதற்கு கல்விப் பணிப்பாளர்கள் முடிவு எடுக் கலாம் எனவும் அதில் தெரி விக்கப்பட்டுள்ளது. (78)

## முஸ்லிம்...

பதவியை ராஜிநாமாச் செய் யாமல் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது

தம்மை மட்டக்களப்பு மாவட்டப்பகுதி முஸ்லிம்கள் தெரிவு செய்ததாகவும், தனக்கு ராஜிநாமா குறித்து எதுவித அறிவித்தல்களும் வர வில்லை என்றும் அவர் சாக் குப்போக்கு கூறிவருகிறா ராம்.

இதேசமயம் ஹிஸ்புல்லா எம். பி. பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது மற் றொரு முஸ்லிம் காங்கிரஸ் எம். பியான அபூபக்கர் குறுக் கிட்டு இவர் முஸ்லிம் காங்கி ரஸ் எம். பி. யல்ல, நான் தான் முஸ்லிம் காங்கிரஸ் எம். பி என்று கூறினார்.

அப்போது சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் காமினி பொன் சேகா 'முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. பிரச்சினையை நீங் கள் தீர்த்துக் கொள்ளுங்கள். எம். பி. ஒருவர் பேசுவதை தடுக்க முடியாது என்றார்.

## நியமனம்

முகமாக மேலதிக நியமனங் களை வழங்குமாறு சுகாதார அமைச்சை தாம் கோரியுள்ள தாகவும் பணிப்பாளர்மேலும் தெரிவித்தார். (70)

கிழக்கு பாடசாலைப் பிள்ளை களின் தேவைகளுக்கு இப் பணம் பயன்படுத்தப்படும். (74)

## உலர் உணவு...

யாத நிலை ஏற்படலாம். இதுவரை மீள்பரிசீலனைக் காக ஒப்படைக்காதவர்கள் உடனடியாக கிராம சேவை யாளரிடம் தமது அட்டை களை ஒப்படைக்குப் படி கேட்கப்படுகின்றனர்.

## திருப்பளுகாமம்...

பின் ஒன்பது பேரை தவிர ஏனையோரை விடுவித்தனர் தடுத்து வைக்கப்பட்டவர் களின் குடும்பஙிதர்களும் அடங் குவர்.

## உள்ளூராட்சி...

முஸ்லிம் காங்கிரசும் தாக் கல் செய்துள்ளன.

ஏனைய பகுதிகளில் வேட்பாளர் பட்டியல்கள் பூர்த்தியாகவில்லை என அர சியல் கட்சிகளின் வட்டாரங் கள் தெரிவித்தன.

இதேவேளை கொழும்பு மாநகரசபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்க் கட்சி களின் ஆதரவுடன் தனித்துப் போட்டியிடப் போவதாகவும் செய்திகள் அடிபடுகின்றன. (74)

தெல்லிப்பழை உ. அ. அதிபர் பிரிவைச் சேர்ந்தோர் பங்களிப்பு செய்வதற்கு வசதி யாக 30 ஆம் திகதி சனிக் கிழமை மீட்பு நிதி திரட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பங்களிக்க விரும்புவோர் சிற்றூரவைகளினால் அவர் களுக்கென அறிவிக்கப்பட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரத்தில் தமது பங்களிப் பைச் செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேற் படி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வாழ்வோர் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-30 மணிக்கும் பி. ப. 2-00 மணிக்குமிடையில் தெல்லிப் பழை விடுதலைப்புலிகள் மக் கள் முன்னணிச் செயலகத் துடன் தொடர்பு கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## யாழ் நகர...

மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் ஸ்ரீலங்கா விமானப்படையாலும் இரா ணுவத்தினராலும் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் களின் போது சேதமடைந்த பல கட்டிடங்களின் இடிபாடு கள் இன்னமும் அகற்றப்படா மல் இருப்பது குறிப்பிடத்தக் கது. (70)

இதற்கு இங்குள்ள தொழிற் சங்க அரசியல் கட்சிகளிடை யே தேர்தல் போட்டித்தவிர்ப் பை ஏற்படுத்தி ஒன்றிணைந்த சுயேட்சைக்குழு அமைக்கப் போவதாகவும் அவர் கூறி னார். (38)

## மாநகர வைத்திய அதிகாரியாக தெய்வேந்திரன்

யாழ் மாநகரசபை சுகா தார வைத்திய அதிகாரியாக வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரன் நியமிக்கப் பட்டுள்ளார்.

அடுத்தமாதம் முதல் இவர் தனது புதிய பணியை மேற் கொள்வார்.

டொக்டர் தெய்வேந்திரன் முன்னர் தெல்லிப்பழை சுகா தார வைத்திய அதிகாரியாக வும் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவின் தலைவராகவும் பணிபுரிந் தமை குறிப்பிடத்தக்கது. (70)

## வீரமரணம்

மணலாறில் கடந்த ஞாயிறு இரவு நடந்த மிதிவெடி விபத் தில் குன்றன் (சுப்பிரமணியம் குமாரவேல்) இளிதொச்சி வீரமரணமடைந்தார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் "டச்சு வீதி" பில்டிங்ஸ்"இல் உள்ள அச்சகத்தில் 26 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது!